*12*

# இயேசுவின் அதிகாரத்துவம்: கட்டுப்படுத்துதல் மற்றும் சுயாதீனம் தருதல் ஆகிய இரண்டும்

*இயேசுவின் அதிகாரத்துவம் நடைமுறையில் எவ்வாறு செயல்படுகிறது? நாம் இரண்டு உதாரணங்களைக் கண்ணோக்குவோமாக.*

*முதலாவது, மருந்து ஒன்றை மருத்துவர் பரிந்துரைக்கும்போது என்ன நடக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். நோயாளி தொற்று கொண்டிருந்தால், மருத்துவர் எதிர் உயிரி மருந்தை, ஒருவேளை பென்சிலீனைப் பரிந்துரைப்பார். நோயாளி அந்தப் பரிந்துரைச் சீட்டை மருந்துக் கடையில் கொடுக்கும்போது, அவர் பென்சிலீன் தவிர வேறு எதையும் பெற்றுக்கொள்வதை எதிர்பார்ப்பது இல்லை. மருத்துவர் நோயாளிக்குக் கொடுக்க தேவையற்ற எல்லா மருந்துகளின் பட்டியலையும் தரும்படி எதிர்பார்க்கப்படுவது இல்லை. மாறாக, கொடுக்கப்பட வேண்டிய ஒன்றை அவர் குறிப்பிடும்போது, மற்ற எல்லாம் தாமாகவே தவிர்க்கப்படுகின்றன. மருத்துவர் எழுதியுள்ளதில் மருந்துக் கடைக்காரரின் தெரிவுகள் கட்டுப்படுத்தப் படுகின்றன.*

*அது, ஒரு மருந்துப் பரிந்துரைச் சீட்டில் உள்ளவற்றை நிரப்புவதில் மருந்து கடைக்காரர் சுயாதீனம் கொண்டிருப்பதில்லை என்று கூறுவதாகாது. நோயாளி எந்தக் கம்பெனியின் பென்சிலீன் மருந்தைப் பெறுவார் என்பதைப் பற்றி மருந்துக் கடைக்காரர் சில தெரிவுகளைக் கொண்டிருக்கலாம், ஆனால் அது பென்சிலீன் மருந்தின் வகையாக இருத்தல் வேண்டும். அவர், மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட எதிர் உயிரி மருந்துடன் கூட, சளிக்கான எதிர்ப்பு மருந்தோ, இளைப்புக்கு எதிரான மருந்தோ அல்லது வேறு எந்த மருந்தோ நோயாளிக்குக் கொடுக்க அதிகாரத்துவம் அற்றவராக இருக்கிறார்.*

*இரண்டாவது உதாரணம் ஒன்றை ஆழ்ந்து சிந்தியுங்கள். ஒருவேளை நான் எனது காரை, பழுது நீக்குபவர் ஒருவரிடத்தில் எடுத்துச் சென்று, அதை முற்றிலும் சரிசெய்யும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். நான் எனது காரை எடுக்கத் திரும்பச் செல்லும்போது, நான் செலுத்த வேண்டிய தொகைக்கான சீட்டில், மீளக்கட்டப்பட்ட அலைபரப்பி ஒன்றிற்கான கட்டணம் உள்ளது. அதைத் செலுத்த நான் கடைமைப் பட்டு இருக்கிறேனா? இல்லை. ஏன் இல்லை? ஏனென்றால் முழுமையான சரிசெய்தல் என்பது அலைபரப்பியைப் பழுது நீக்குதலை உள்ளடக்கி இருப்பதில்லை. அந்தப் பற்றுச்*

சீட்டைப் பற்றிப் பழுது பார்ப்பவர் விவாதிக்க முடிவு செய்தால் என்னவாகும்? அலை பரப்பிக்கான வேலை அவருக்குச் சற்றுச் செலவை ஏற்படுத்தி இருக்குமே. அவரது செயல்பாட்டை நியாயப்படுத்தி அலைபரப்பி பழுதுநீக்கும் செலவை நான் செலுத்தச் செய்யும் முயற்சியில், எனது அலைப்பரப்பியில் பணிசெய்யக் கூடாது என்று அவரிடத்தில் நான் ஒருக்காலும் கூறவில்லை என்பதை அவர் எனக்கு நினைவுபடுத்தலாம். அது சூழ்நிலையை மாற்றுகிறதா? இல்லவே இல்லை. நான் முழுமையான சரிசெய்தலைச் செய்யும்படி அவரிடத்தில் கூறியபோது, அந்த அறிவுறுத்துதல், அவர் எதைச் செய்ய அதிகாரத்துவம் கொண்டுள்ளார் என்பதைக் கட்டுப்படுத்திற்று. எனது அலைபரப்பியை சரிசெய்யவோஅல்லது எனது காரின்வேறு பாகத்தைச் சரிசெய்யவோ, குறிப்பான அனுமதியின்றி அவர் அவற்றைச் செய்ய உரிமை எதுவும் கொண்டிருக்கவிலலை.

எனது காரின் ஸ்பார்க் பிளக்குகளை மாற்றியதற்கான பில் ஒன்று செலுத்துகைச் சீட்டில் பட்டியல் இடப்பட்டிருத்தல்பற்றி அறைகூவல் விடுக்க நான் விரும்பினால், என்னவாகும்? பழுது பார்ப்பவரிடத்தில் நான் “ஸ்பார்க் பிளக்குகளுக்கான இந்தக் கட்டணம் ஏன் குறிக்கப்பட்டுள்ளது? ஸ்பார்க் பிளக்குகளை மாற்றும்படி எதையும் நான் ஒருக்காலும் கூறவில்லையே” என்று பழுது நீக்குபவரிடத்தில் நான் கூற முடியுமா? பழுது நீக்குபவர் அனேகமாக, கார்களைப் பற்றி நான் ஒன்றும் அறியாதவனாக இருக்கிறேனா அல்லது அவரை நான் ஏமாற்ற முயற்சி செய்கிறேனா என்று திகைப்பு அடைவார். ஏன்? ஏனென்றால் ஸ்பார்க் பிளக்கை மாற்றுதல் என்பது முற்றிலும் சரிசெய்தலின் பாகமாக *உள்ளது*. திறமைவாய்ந்த பழுதுநீக்குபவர் அந்தப் பணியை உள்ளடக்க வேண்டும் என்று அறிந்திருப்பார் என்பதால், ஸ்பார்க் பிளக்குகளை மாற்ற வேண்டும் என்று குறிப்பாக நான் கூறத் தேவையிராது. முற்றிலும் சரிசெய்ய வேண்டும் என்று நான் அவருக்குக் கூறுகிறபோது, தேவைப்பட்டால் ஸ்பார்க் பிளக்குகளை மாற்றும் உரிமையை நான் அவருக்கு கொடுக்கிறேன்.

இந்த இரண்டு உதாரணங்களிலும் உள்ள சில ஒற்றுமைகளையும் சில வேறுபாடுகளையும் கவனியுங்கள். இரு விஷயங்களுமே *கட்டுப்படுத்தப்பட்ட* அதிகாரத்துவத்தைக் கொண்டுள்ளன. மருந்து கடைக்காரர், மருந்துப் பரிந்துரைக் குறிப்பில் எதிர் உயிரி மருந்து இருக்க, இரத்த அழுத்த மருந்தை அதற்குப் பதிலியாகக்கொடுக்கவோ அல்லது சேர்த்துக் கொடுக்கவோ முடியாது. பழுது நீக்குபவர், சரிசெய்தலுக்கான பணிகொடுப்புடன் அலைபரப்பி பழுது நீக்குதலைச் சேர்க்க முடியாது. இருப்பினும் இந்த ஒவ்வொரு விஷயத்திலும், அதி காரத்துவம் ஒரு கருத்தில் *சுயாதீனம் கொண்டும்* உள்ளது. ஒரு மருத்துவர், எந்தக் கம்பெனி மருந்தைப் பயன்படுத்தலாம் என்று வெளிப்படையாகக் கூறாதபோது, மருந்துக் கடைக்காரர் தாம் விரும்பும் எந்தக் கம்பெனியின் பென்சிலீனையும் பயன்படுத்தச் சுயாதீனம் கொண்டிருக்கிறார். அவ்வாறே, முற்றிலும் சரிசெய்தல் என்ற அறிவுறுத்துதல், ஸ்பார்க் பிளக்குகளைச் சரிசெய்யும்படி குறிப்பாகக் கூறாமலேயே அவ்வேலையைச் செய்யப் பழுதுநீக்குபவருக்குச் சுயாதீனம் தருகிறது. பொதுவான அறிவுறுத்துதல் குறிப்பான செயலை மறைமுகமாக உள்ளடக்குகிறது.

அன்றாட உதாரணங்களான இவை, நமது வாழ்வில் கர்த்தருடைய அதிகாரத்துவம் செயல்படும் வழியைப் போன்றவைகளாக உள்ளன. சில விஷயங்களில், அவரது அதிகாரத்துவம், குறிப்பிட்ட கம்பெனியின்

பென்சிலீனைப் பரிந்துரைக்கும் மருத்துவருடைய அதிகாரத்தைப் போன்றுள்ளது. சில வேளைளில் தேவன் குறிப்பாக உரைப்பவராக, தெரிந்துகொள்ளுதல் எதையும் விட்டுவைக்காதவராக இருக்கிறார். மருந்துக் கடைக்காரர் தரக்கூடாத மருந்து ஒவ்வொன்றையும் மருத்துவர் குறிப்பிடும்படி எதிர்பார்க்காது இருப்பது போலவே, நாம் செய்யக்கூடாத ஒவ்வொன்றையும் தேவன் குறிப்பிடவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நாம் எதைச் செய்ய முடியும் என்பதைக் கட்டுப்படுத்துவத்தின் மூலம் அவர் மற்ற எல்லாச்சாத்தியக்கூறுகளையும் நீக்கிப்போடுகிறார்.

சில கட்டளைகள், முற்றிலும் சரிசெய்தலுக்கான பணி கேட்பு போன்றவையாக உள்ளன, இவைகள் வெளிப்படையாக உரைக்கப்படாத செயல்களுக்கான அதிகாரத்துவத்தை மறைவாக உணர்த்தும் விரிவான அறிவுறுத்துதல்களைத் தருகின்றன. அந்த பகுதிகளில் நாம், வேதாகமத்தில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டிராத சில விஷயங்களைச் செய்ய உரிமை கொண்டிருக்கிறோம்.[1] மறைமுக அதிகாரத்துவத்தை நாம் பின்பற்றும்போது, நாம் கொலோசெயர் 3:17ல் உள்ள பின்வரும் போதனைக்கு இசைவிணக்க மாகச் செயல்படுகிறோம்: “வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச்செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.”

தேவனுடைய அறிவுறுத்தலுக்கான இந்த அணுகுமுறையின் வேதாகம ரீதி யான உதாரணங்கள் சிலவற்றை நாம் ஆராய்ந்து பார்ப்போமாக. கர்த்தருடைய அதிகாரத்துவத்தின், கட்டுப்படுத்துகிற மற்றும் சுயாதீனம் தருகிற கூறுகள் இரண்டையும் நாம் கவனிப்போம்.

## அமைதியிலிருந்து பகுத்தறிவதற்கான வேதாகம ரீதியான உதாரணம்

எபிரெயர் 7:11-14ம்வசனப்பகுதி, ஒரு ஆசாரியர் என்ற வகையில் இயேசுவை பற்றிப் பேசுகிறது, அவர் நமக்காக முழுமையாகப் பரிதபிக்க முடியும் என்றும் நமக்கும் தேவனுக்கும் இடையில் பூரணத்துவமான மத்தியஸ்தராக அவர் இருக்கிறார் என்றும்அது காண்பிக்கிறது (காண்க எபிரெயர் 4:14-16; 5:1-3). அதன் எழுத்தாளர், ஆதியாகமம் 14:18-20ஆ வசனப்பகுதியில் ஆபிரகாமை ஆசீர்வதித்த, மெல்கிசேதேக் என்ற அரசருடன் இயேசுவை ஒப்பிட்டார் மற்றும் மோசேத்துவ ஆசாரியர்களைக் காட்டிலும் இயேசு மேன்மை வாய்ந்தவராக இருக்கிறார் என்று காண்பித்தார். தேவனிடத்தில் பேசுவதற்கு, மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் மேன்மையாக இருக்கும் ஒரு வழியை இயேசு அளிக்க முடிந்தது என்று நிரூபிப்பதற்காக அவர் இந்த வேறுபாட்டை நிலைநாட்டினார்.

மோசேயின் பிரமாணத்தின் கீழ், ஆசாரியர்கள் லேவிகோத்திரத்தின் ஆரோனின் குடும்பத்தில் இருந்து வந்தனர். அந்தக் குடும்பத்திலும் அங்கவீனத்தின் காரணமாகத் தகுதியற்றவர்கள் ஆகிப் போன உறுப்பினர்கள் தவிர (காண்க லேவியராகமம் 21:1-22:9; குறிப்பாக 21:16-24ஐக் கவனிக்கவும்), ஆரோனின் குடும்பத்திற்குள் எந்த மனிதரும் ஆசாரியராக இருக்க முடிந்தது. ஆரோனின் குடும்பத்தில் குறிப்பிட்ட உறுப்பினர்கள் ஊழியம் செய்ய

வேண்டும் என்று கூறியதில் தேவன் வெளிப்படையாக இருக்க அவசியம் இல்லாதிருந்தது. ஆரோனின் குடும்பத்தின் உறுப்பினர்கள ஆசாரியர்களாக இருக்க வேண்டும் என்ற அறிவுறுத்துதல், ஆசாரியரைத் தேர்ந்தெடுக்கும் செயல் முறையில் குறிப்பிட்ட அளவு சுயாதீனத்தை அளித்தது.

இருப்பினும், ஆரோனின் குடும்பத்திற்குப் புறம்பே இருந்த எவரும் ஆசாரியராகப் பணிசெய்ய அனுமதிக்கப்படவில்லை. ஆசாரியராகப் பணிசெய்வதில் இருந்து மற்ற கோத்திரங்களைப் பழைய ஏற்பாடு குறிப்பாகத் தடைசெய்கிறதா? இல்லை, லேவி கோத்திரத்தில் இருந்தே ஆசாரியர்கள் வருவார்கள் என்று தேவன் குறிப்பிட்டபோது, அவர் மற்ற எல்லாக் கோத்திரங்களையும் (ஆசாரியர்களாகாதபடிக்கு) தாமாகவே விலக்கினார். இவ்வாறாக அவர், மற்ற கோத்திரம் ஒவ்வொன்றின் உறுப்பினர்களையும் வெளித்தள்ளுவதில் வெளிப்படையாயிருத்தல் தேவையற்றதாயிற்று. லேவி கோத்திரம் மற்றும் ஆரோன் குடும்பம் ஆகியவற்றுடன் ஆசாரியத்துவம் *கட்டுப்படுத்தப்பட்டது*. வேறு எவரும் ஆசாரியராகப் பணிசெய்ய அங்கீகரிக்கப்படவில்லை. எபிரெய நிருபத்தின் எழுத்தாளர், தேவனுடைய வசனத்தின் கட்டுப்படுத்தும் அதிகாரத்திற்கு வேண்டுகோள் விடுத்தார்: “நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்த மாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே” (எபிரெயர் 7:14).

## சுயாதீனம் அளிக்கும் அறிவுறுத்தலுக்கு வேதாகம ரீதியான உதாரணம்

சபையின் கூடுகைகள் பற்றிய விஷயத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள். தேவனுடைய மக்கள் வாரத்தின் முதல்நாளில் ஒன்றுகூடி ஆராதித்து கர்த்தருடைய மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நினைவுகூர வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது.[2] எபிரெயர் 10:25ம் வசனம், இந்த சபைக்கூடுதல்களை விசுவாசிகள் விட்டுவிடக்கூடாது என்று போதிக்கிறது. ஒன்று கொரிந்தியர் 11:23-26 வசனப்பகுதி, நாம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை சமூகத்தின் உறுப்பினர்களாக இருக்க அனுமதிப்பதற்கு அவர் நமக்குச் செய்தவற்றை நினைவுகூருதல் என்பது சபைகூடுகைகளின் வலிவான பாகமாக உள்ளது என்று நமக்குக் கூறுகிறது. ஒன்று கொரிந்தியர் 14:15, 26 வசனங்கள், இந்த சபைகூடுகைகளானவை கர்த்தருடைய இராப்போஜனத்துடன் ஆராதனையின் மற்ற செயல்களையும் உள்ளடக்குகின்றன என்று காண்பிக்கிறது. நடபடிகள் 20:7 மற்றும் 1 கொரிந்தியர் 16:2 ஆகிய இரு வசனங்களும், தொடக்ககால சபையார் இந்த விஷயங்களைச் செய்வதற்கு வாரத்தின் முதல் நாளில் கூடினர் என்று குறிப்பிடுகின்றன. இதிலிருந்து நாம், தேவன் தமது மக்கள் ஆராதனைக்கும் புத்தி கூறுதலுக்கும், தமது குமாரன் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்ட நாளான வாரத்தின் முதல்நாளில் ஒன்றுகூட வேண்டும் என்று எதிபார்க்கிறார் என்பதைப் புரிந்துகொள்கிறோம். அது தேவன் குறிப்பிட்டதாக உள்ளது.

அவரது மக்கள் எங்கு ஒன்றுகூட வேண்டும்? அவர்கள் எந்த நேரத்தில் ஒன்றுகூட வேண்டும்? அவர்கள் ஒன்றுகூடுதல் எவ்வளவு நேரம் இருக்க வேண்டும்? இந்தக் கேள்விகள் புதிய ஏற்பாட்டில் எவ்விடத்திலும் குறிப்பாக

விடையளிக்கப்படவில்லை. இவ்விஷயங்களில் முடிவுசெய்ய தேவன் நமக்குச் சுயாதீனத்தை அனுமதித்துள்ளார். நாம் அவ்வாறு செய்யும்போது, அவரது அதிகாரம் இன்றி செயல்படுவதில்லை, ஆனால் அவரது அதிகாரத்தில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் எல்லைகளுக்குள் செயல்படுகின்றோம். முதல்நாளில் ஒன்றுகூட வேண்டும் என்ற அறிவுறுத்துதலானது, ஒன்றுகூடுதலுக்கு ஒரு இடத்தையும் நேரத்தையும் நாம் முடிவு செய்யும்படி நம்மைக் கேட்டுக்கொள்கிறது.

சபைக்கட்டிடம் மற்றும் அதன் பயன்பாடு ஆகியவை தொடர்பான கேள்விகளைப் பற்றி நாம் நினைக்கும்போது, இதே கொள்கையைப் பயன்படுத்துகின்றோம். புதிய ஏற்பாட்டில் சபைக் கட்டிடம் ஒன்றைப் பற்றி நாம் ஒருக்காலும் வாசிப்பதில்லை என்று கூறுதல் சரியானதாகவே உள்ளது. நாம் ஒன்றுகூடி வரவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்றால் அந்த ஒன்றுகூடுதலுக்கு ஒரு இடம் தேவை என்பது தெளிவு. சபைக் குழுமமானது யாரேனும் ஒருவருடைய வீட்டிலோ, சொந்தக் கட்டிடத்திலோ அல்லது கூடும் இட வசதிக்கென்று வாடகைக்கு ஒரு கட்டிடத்தை அமர்த்திக் கொண்டு அங்கு ஆராதித்தலோ, எதுவாக இருப்பினும் அது முடிவு செய்யும் விஷயமாக உள்ளது. இந்தத் தேர்வுகளில் எதுவும், நாம் செய்ய வேண்டும் (ஒன்றுகூடுதல்) என்று தேவன் நமக்குக் கூறியுள்ள விஷயத்தினால் மற்றும் அவ்வாறு செய்வதற்கு அவர் ஒரு குறிப்பான இடத்தைக் குறிப்பிடவில்லை என்ற உண்மையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[3]

அந்தக் கட்டிடம் குழுவாக வேதாகமத்தைப் படித்தலுக்கும் பயன்படுத்தப்படலாமா? தொடக்க கால சபையில் விசுவாசிகள் "அப்போஸ்தருடைய உபதேசத்திலும், ... உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என்று நாம் மீண்டும் அறிகிறோம் (நடபடிகள் 2:42அ). மேலும் நாம், சுவிசேஷம் போதிக்கப்படக்கூடும்படி கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் பக்குவமடைவதற்கு உதவிசெய்தல் என்ற அவர்களின் ஊழியத்தில், போதித்தல் என்பது ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது என்றும் அறிகிறோம் (காண்க மத்தேயு 28:19; கோலோசெயர் 1:28, 29; எபேசியர் 4:11, 12; 2 தீமோத்தேயு 2:2). போதித்தல் நடைபெற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பது நிச்சயம், ஆனால் அது எவ்வாறு மற்றும் எப்போது செய்யப்பட வேண்டும் என்பது ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை. வாரத்தின் முதல் நாளில் சபையானது ஏற்கனவே ஒன்றுகூடி இருக்கும் வேளை என்பது அதைச் செய்வதற்கு வசதியான நேரமாக உள்ளது. இருப்பினும், வாரத்தின் எந்த இரவு வேளையிலும் அல்லது பகல்வேளையிலும் வேதாகமப் படிப்பு என்பது ஏற்புடையதாவே உள்ளது (காண்க நடபடிகள் 2:46).

சபையின் ஆராதனைக்கும் போதனைக்கும் பயன்படுத்தப் படக்கூடிய எவ்விதமான அமைவுகளை நாம் ஒரு கட்டிடத்தில் கொண்டிருக்கலாம்? சபை முழுவதையும் கொண்டிருக்கும் அளவுக்கு ஒரு பெரிய அறையானது அனுமதிக்கப்பட்டுள்ளதா? பல்வேறு வகுப்புகளுக்கான சிறிய அறைகள் பற்றிய விஷயம் என்ன? அந்த சிறிய அறைகளில் மேஜைகள் மற்றும், நாற்காலிகள், கரும்பலகைகள் அல்லது போதனைக்குரிய மற்ற உதவிப்பொருட்கள் வைக்கப்படலாமா? ஒரு சபையார் அந்தக் கட்டிடத்தில் இருக்கையில், அந்த சபையார் அங்கீகரிக்கப்பட்ட பிறதேவைகளைப் பூர்த்தி செய்ய முடிவு செய்தால்,

அது பற்றிய விஷயம் என்ன? அவர்கள் தொடக்கக் காலக் கிறிஸ்தவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்பட்ட குழு ஐக்கியம் போன்றவற்றின் வேளைகளுக்காக ஒன்றுகூடலாமா? (காண்க நடபடிகள் 2:42, 46)? அப்படியென்றால், அந்த ஐக்கிய வேளைகள் மேலாண்மை செய்யப்பட எளிதாகும் வகையிலான அமைப்புகள்/ பொருட்கள் அந்தக் கட்டிடத்தில் உள்ளடக்கப்படலாமா? உதாரணமாக, அவர்களின் ஐக்கிய ஒன்றுகூடுதலின் பாகமாக இருக்கும் உணவு தயாரித்து உண்ணுதல் என்பதற்கு ஒரு இடத்தை அவர்கள் அங்கே தரலாமா? ஒவ்வொரு விஷயத்திலும், "ஆம்" என்பதே தர்க்க ரீதியான பதிலாக உள்ளது. இவையாவும் தேவன் தமது மக்கள் செய்யும்படி விரும்பியதாகக் கூறியுள்ளவற்றினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## கட்டுப்படுத்தும் அறிவுறுத்துதலுக்கு வேதாகமரீதியான உதாரணம்

இயேசுவின்அதிகாரத்துவத்தின் இயல்புக்கு இன்னொரு உதாரணமானது, விசுவாசிகள் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்ற கட்டளையை உள்ளடக்கியிருக்கிறது. சமீபத்திய அகராதி ஒன்றில் "ஞானஸ்நானம்" என்பதற்கு அர்த்தத்தைத் தேடிப்பாருங்கள், அப்போது நீங்கள் அதில் முழுக்காட்டுதலை அல்ல ஆனால் இன்றைய நாட்களில் தெளித்தல் மற்றும் ஊற்றுதலை அனுமதிக்கும் பொதுவான பயன்பாட்டைக் காண்பீர்கள்.[4] இருப்பினும் ஞானஸ்நானம் பெற, ஊற்றுதல் அல்லது தெளித்தல் என்பவற்றை வழிகளாகத் தேவன் அங்கீகரிக்கவில்லை. முழுக்காட்டுதல் மற்றும் முழுக்காட்டுதல் ஒன்றே கர்த்தர் அங்கீகரித்துள்ளதாக இருக்கிறது. ஞானஸ்நானத்தின் மற்ற முறைகளை புதிய ஏற்பாடு வெளிப்படையாக தடைசெய்வதில்லை என்றிருக்கையில், இதற்கான கிரேக்கச் சொற்றொடரானது, தன்னிலேயே முழுகாட்டுதல் தவிர மற்ற எல்லா முறைகளையும் விலக்குகிறது.

''ஞானஸ்நானப்படுத்துதல்'' என்பதற்கு *baptizo* என்பது கிரேக்க வார்த்தையாக உள்ளது. ஜோசப் தாயர் என்பவரின் அகராதி இவ்வார்த்தையைப் பின்வருமாறு விளக்குகிறது: "திரும்பத் திரும்ப அமிழ்த்துதல், மூழ்கடித்தல், ஆழ்த்துதல் … அமிழ்த்துதல் அல்லது மூழ்கடித்தலினால் சுத்தம்செய்தல், தண்ணீரைக் கொண்டு கழுவுதல், சுத்தம் செய்தல்."[5] வால்ட்டர் பாவர் என்பவரின் அகராதியின் மூன்றாவது பதிப்பு, பழங்கால உலகப்பிரகாரமான கிரேக்க இலக்கியத்தில் இவ்வார்த்தை, "பல்வேறு கருத்துக்களில் தண்ணீருக்குள் இடுதல் அல்லது செல்லுதல்" என்று குறிப்பிடுகிறது.[6] இவ்வார்த்தையின் அர்த்தம் பற்றிய கூடுதல் சாட்சிம், யாரேனும் ஒருவர் ஞானஸ்நானம்படுத்தப்பட்டபோது என்ன நடந்தது என்பது பற்றிய விபரங்களைக் கொடுக்கும் வசனப்பகுதிகளில் காணப்படுகிறது. நடபடிகள் 8:38ம் வசனம், எவ்வாறு பிலிப்பும் மந்திரியும் "ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்" என்பதை விவரிக்கிறது. ரோமர் 6:3, 4 மற்றும் கொலோசெயர் 2:11, 12 ஆகிய வசனப்பகுதிகளில் பவுல், ஞானஸ்நானத்தை இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் ஒப்பிட்டார்.

கல்வியாளர்கள், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய மற்ற கிரேக்க வார்த்தைகளில் இருந்து *baptizo* என்பதன்

பயன்பாட்டிற்குக் கூடுதலான உட்கண்ணோட்டக் கருத்துகளை ஆதாயப் படுத்துகின்றனர். நோக்கம் அதுவாக இருந்திருந்தால் பல வார்த்தைகள் விருப்ப நோக்கின்படி விரிவான அர்த்தத்தை அனுமதித்திருக்கும். எழுத்தாளர்கள் தெளித்தல் அல்லது ஊற்றுதல் பற்றிப்பேச விரும்பி இருந்தால், அவர்கள் *proschusis* (எபிரெயர் 11:28) அல்லது *rhantizo* (எபிரெயர் 9:13, 19, 21; 10:22; 12:24; 1 பேதுரு 1:2) போன்ற வார்த்தைகளை பயன்படுத்தி இருக்க முடியும். இவ்விரு வார்த்தைகளுமே யாரேனும் ஒருவர் அல்லது ஏதேனும் ஒன்றின் மீது தண்ணீரை தெளித்தல் அல்லது ஊற்றுதலைக் குறிக்கின்றன.[7] இவற்றில் ஒன்று, இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் "அவருடைய இரத்தந்தெளிக்கப்படுகின்றனர்" என்ற உண்மையின் குறிப்பைக் கூடப் பயன்படுத்துகிறது (1 பேதுரு 1:2). இருப்பினும், இவ்வார்த்தைகள் ஞானஸ்நானத்திற்கான குறிப்பாக ஒருக்காலும் பயன்படுத்தப்படவில்லை. [ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிடும்] ஒவ்வொரு வசனப்பகுதியும், "அமிழ்த்துதல், ஆழ்த்துதல் அல்லது முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்படும் *baptizo* என்ற வார்த்தையையே பயன்படுத்துகின்றன.

இந்தச் சாட்சியமானது, தேவன் தமது உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஒப்புக்கொள்பவர்கள், பழைய வாழ்வில் இருந்து புதிய வாழ்விற்குக் கடந்து வருதலுக்கான வழிமுறை என்ற வகையில் முழுக்காட்டப்பட வேண்டும் என்று நோக்கங்கொண்டார் என்ற முடிவிற்கு வழிநடத்துகின்றன. சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படிவதில், மக்கள் ஆவிக்குரிய வகையில் இயேசுவின் சொந்த உயிர்த்தெழுதலைப் பின்பற்றுகின்றனர் (ரோமர் 6:3-7). "முழுக்காட்டுதல்" என்று அர்த்தப்பட்ட ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தியதால் தேவன், முழுக்காட்டுதலை ஞானஸ்நானப்படுத்துதலின் முறையாக அங்கீகரித்தார். அவர் மற்ற எல்லாச் சாத்தியக்கூறுகளையும் வெளிப்படையாக தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அவர் கூறியது எதுவோ, அது, மற்ற எல்லாச் சாத்தி யக்கூறுகளையும் மட்டுப்படுத்தியது அல்லது கட்டுப்படுத்தியது. ஞானஸ்நானம் என்ற வகையில் வேறு எதையாவது நடைமுறைப்படுத்துதல் என்பது அவர் அங்கீகரித்துள்ளவற்றிற்கு அப்பால் செல்வதாக உள்ளது.

அதிகாரத்துவக் கொள்கையை நாம், சபை ஆராதனையில் இசை பற்றிய கேள்விக்கு நடைமுறைப் படுத்துவோமாக. முதல் நூற்றாண்டு உலகத்தில் இசையின் மற்ற வகைகள் நன்கு அறியப்பட்டிருப்பினும், சபையின் ஆராதனையில், வாய்ப்பாட்டாகப் பாடுதல் என்பதைப் பற்றி மாத்திரமே புதிய ஏற்பாடு பேசுகிறது. இது கிறிஸ்து சபையைத் தொடங்கிப் பல நூற்றாண்டுகளுக்கு நடைமுறையாக இருந்தது. மற்றும் நாம், சபையின் ஆராதனையில் கட்டுப்படுத்தப்பட்ட இசை என்பது பாடுதல் என்பதே தேவனு டைய விருப்பநோக்கமாக இருந்தது என்று காண்போம். இது மேலோட்ட மாக மாத்திரம் இருந்த விஷயமாக அல்ல, ஆனால் அவரது மக்கள் அவரை "ஆவியோடும் உண்மையோடும்" ஆராதிப்பதைக் காண்பதில் மிகவும் உகந்ததாக உள்ளது (யோவான் 4:24). இசைக்கருவியின் இசை போன்றதாக இன்றி, பாடுதல் பற்றிய சில விஷயங்கள், நாம் தேவனை ஆராதிக்கையில் மற்றும் சேவிக்கையில், தேவனிடத்தில் நெருங்கி வளர நமக்கு உதவுகின்றன.

## முடிவுரை

நாம் செய்யும் *ஒவ்வொரு விஷயமும்* கிறிஸ்துவின் அதிகாரத்தின்பேரில்

*செய்யப்படவேண்டும். அதனால்தான் நாம் சபையின் மீது செயல்விளைவை ஏற்படுத்தும் எந்த முடிவையும் ஏற்படுத்தும் முன்னர், அதிகாரத்துவம் பற்றிய விஷயங்களைக் கவனமாகப் படிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. "நாம் செய்ய விரும்புவது என்ன?" என்பதல்ல ஆனால் "நாம் எதைச் செய்யத் தேவன் அங்கீகாரம் அளித்துள்ளார்?" என்பதே எப்போதும் கேள்வியாக உள்ளது.*

*நாம் போதிக்கும் மற்றும் செய்யும் விஷயங்கள் ஒவ்வொன்றிலும் இயேசுவின் அதிகாரத்துவம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் (கொலோசெயர் 3:17). சில வேளைகளில் அவரது அதிகாரத்துவம் கட்டுப்படுத்துவதாவும் மற்ற வேளைகளில் அது சுயாதீனம் தருவதாகவும் உள்ளது. வேதாகம விஷயங்களுக்கு அதிகாரத்துவக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் என்பது நமது அன்றாட நடவடிக்கைகளில் நாம் பொதுவாகப் பகுத்தறியும் வகையில் இருந்து வேறுபடுவதில்லை. நாம் செய்ய நினைக்கும் ஒரு செயலானது தேவன் கொடுத்துள்ள அதிகாரத்துவத்தில் மறைமுகமாக உணர்த்தப்படுகிறதா அல்லது அதைப்போன்றதொரு செயலைக் தேவன் குறிப்பிட்டு இனி அது செய்யப்படக் கூடாது என்பதால் கட்டுப்படுத்தப்படுகிறதா என்பதை எப்போதும் கேட்க வேண்டும். மக்கள் தேவனுடைய வார்த்தையுடன் ஒன்றும் கூட்டவோ அல்லது அதிலிருந்து எதையாவது குறைக்கவோ கூடாது என்று தேவன் கட்டளையிட்டபோது - இது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிலும் எதிர்பார்க்கப்படும் விஷயமாக உள்ளது (காண்க உபாகமம் 4:2; 12:32; யோசுவா 1:7; 1 கொரிந்தியர் 4:6; வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19) - அவர் இதையே அர்த்தப்படுத்தினார்.*

---

*குறிப்புகள்*

*[1]சில வேளைகளில் நல்ல நோக்கங்கொண்ட மக்கள், இன்றைய நாட்களில் சபையானது வேத வசனங்களில் ஒருக்காலும் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிராத விஷயங்களைச் செய்வதைக் கவனிக்கின்றனர். உதாரணமாக, பல சபைக் குழுமங்கள் பாடல் புத்தகங்களைப் பயன்படுத்துகின்றன அல்லது சபையார் காணும்படி பாடல் கீதவரிகளை ஒளிப்பட வீழ்த்தி மூலம் ஒரு திரையில் காண்பிக்கின்றன. பலர், "சபைக் கட்டிடம்" என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு கட்டிடத்தில் ஒன்றுகூடி வருகின்றனர். ஆராதனைக்கான இந்த உதவிப்பொருள்கள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டு இருப்பதில்லை. இவை போன்ற விஷயங்களைக் கவனிப்பதில், சிலர், "வேதாகமத்தில் குறிப்பிடப்படாத பல விஷயங்களை நாம் செய்கிறோமே" என்று கூறி, [தங்களுக்கு தோன்றும்] புதிய கருத்துக்களை நியாயப்படுத்த முயற்சி செய்வார்கள். நாம், தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவை மற்றும் அவரால் அங்கீகரிக்கப்படாதவை ஆகியவற்றின் இடையில் உள்ள வேறுபாட்டை அறிய வேண்டும். தேவனுடைய வசனத்தில் சில விஷயங்கள் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அதை செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றி தேவன் வரையறைகளை அமைத்திருந்தால், நாம் அதை மாத்திரம் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறோம் மற்றும் வேறு எதையும் செய்யக்கூடாது. ஒரு கருத்தானது எவ்வளவு நல்லதாகக் காணப்பட்டாலும், அவர் கூறியுள்ளவற்றிற்கு அப்பால் செல்ல நாம் அனுமதிக்கப்படுவதில்லை. நாம், அதிகாரத்துவம் (என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஆணை) மற்றும் முன்நிகழ்ந்தது (என்ன செய்யப்பட்டது என்பதற்கு உதாரணம்) ஆகியவற்றிற்கு*

*இடையில் வித்தியாசப்படுத்த வேண்டும். இவ்விரு கருத்துக்களும் ஒன்று போன்றவையே என்பது போன்று இதைக் கையாண்டு இருக்கின்றனர் (உதாரணத்திற்கு,* F. Lagard Smith, *Radical Restoration: A Call for Pure and Simple Christianity* [Nashville: Cotswold Publishing, 2001], 67, 70, 111, 205, 213 *என்ற புத்தகத்தில் காணவும்). முன்நிகழ்ந்த பல நிகழ்வுகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன - அவற்றில் சில நல்லவையாகவும் சில மோசமானவையாகவும் உள்ளன. (மோசமான முன்நிகழ்வுகள், நடபடிகள் 5ல் அனனியா மற்றும் சப்பீராள் ஆகியோரின் விஷயம், 1 கொரிந்தியர் நிருபம் 1ம் அதிகாரத்தில் கொரிந்து சபையில் பிரிவினை மற்றும் 1 கொரிந்தியர் நிருபம் 6ம்அதிகாரத்தில் சகோதரன் சகோதரனுக்கு எதிராக வழக்காடுதல் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கின்றன.) மேலும் நாம், மற்றவற்றை அல்ல ஆனால் நல்ல முன்நிகழ்வுகளையே பின்பற்றும்படி எதிர்பார்க்கப்படுகிறோம். ஒரு செயல் அல்லது அதன் சூழ்நிலையின் இயல்பு பற்றிய சில விஷயங்கள் அல்லது அதைப்பற்றி வேதாகம எழுத்தாளர் குறிப்பிட்டுள்ள விதமானது, ஒரு செயல் எதிர்பார்க்கப்படுகிறதா இல்லையா என்பதை நமக்குக் கூற முடியும். அதனால்தான் நாம் வாரத்தின் முதல்நாள் தோறும் ஆராதனைக்கும் புத்திகூறுதலுக்கும் ஒன்றுகூடுகிறோம் ஆனால் ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்துடன் வாழ்த்துவதில்லை (2 கொரிந்தியர் 13:12). [2]யூதர்களே தொடக்காலக் கிறிஸ்தவர்களாக இருந்தனர். ஏழாம் நாளாகிய ஓய்வுநாளில், ஆராதனைக்காக ஜெப ஆலயத்தில் ஒன்றுகூடுதல் என்ற நடைமுறையானது அவர்கள் உருவாக்கப்பட்ட ஆண்டுகளினூடே அவர்களுக்குள்ளாக ஆழப்பதிய வைக்கப்பட்டு இருந்தது. எனவே கிறிஸ்தவர்கள் என்ற வகையில் அவர்கள், விசேஷித்த ஆசரிப்பு நாளை ஏழாம் நாளில் இருந்து முதலாம் நாளுக்கு மாற்றிக்கொள்ளக் காணுதல் என்பது திகைப்புக்கு உரியதாக இருக்கிறது. மிகப்பலத்த நோக்கம்தான் இப்படிப்பட்ட மாறுதலுக்கு அவர்களை வழிநடத்தியிருக்கக் கூடும். அந்த நோக்கமானது, முதலாம் நாளில் தேவன் இயேசுவை உயிர்ப்பித்தார் என்ற அவர்களின் விசுவாசத்திலும் அவ்வாறு செய்வதில் அவர்கள் "ஆண்டவரும் கிறிஸ்துவும்" என்ற அவரது உரிமை கோருதலை அங்கீகரித்தலிலும் காணப்படுகிறது (காண்க நடபடிகள் 2:36; மேலும் காண்க ரோமர் 1:4). உயிர்த்தெழுதலே விசுவாசத்தையும் கிறிஸ்தவரின் வாழ்வையும் நியாயப்படுத்துகிறது (காண்க 1 கொரிந்தியர் 15:14-17). உயிர்த்தெழுதல் பற்றிச் சிந்தித்தல் என்பது, இயேசுவின் தியாகம் நிறைந்த இரட்சிப்பின் கொடை பற்றிய நமது ஆழ்ந்த சிந்தனையின் முக்கியமான பாகமாக உள்ளது. கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிப் பவுலின் உபதேசத்தில் இருந்து வருகிற ஒரு சொற்றொடரானது இந்த வலியுறுத்தத்தை நமக்கு காண்பிக்கிறது. 1 கொரிந்தியர் 11:23-26ல் கொரிந்து சபைக்கு அவர், ஆண்டவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இரவில் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார் என்பதை நினைவூட்டினார். பின்பு அவர் அதன் நோக்கங்களைக குறிப்பிட்டார்: (1) கிறிஸ்து நமக்காகச் செய்திருப்பவற்றை நினைவுகூருதல் மற்றும் (2) "கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத்" தெரிவித்தல் (வசனம் 26; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "கர்த்தர் வருமளவும்" என்ற சொற்றொடர், கிறிஸ்து கல்லறையில் இருந்துவிடவில்லை என்பதை அறிவிக்கிறது. நமக்காக அவர் செய்த ஊழியத்தைப் பற்றி நாம் நினைக்கும்போது, அவர் இப்போது உயிருடன் இருக்கிறார் மற்றும் திரும்பவும் வருவார் என்ற உண்மையையும் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். [3]குறிப்பிட்ட சில விஷயங்கள் ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டுமா இல்லையா என்ற கேள்வியும் இங்கு பொருத்தமாகிறது. உதாரணமாக, பாடல் புத்தகங்கள் பற்றிப் புதிய ஏற்பாடு வெளிப்படையாக (நேரடியாக) எதுவும் கூறுவதில்லை, ஆனால் தொடக்க கால சபையார் பாடினர் என்று நாம் அறிகிறோம். பாடல் புத்தகம்*

*போன்ற சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கருவியானது, பாடுதலில், மறைமுகக் கருத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எதிர்ப்பார்க்கப்படும் செயல்பாட்டைச் செய்ய நமக்கு உதவுகிறது. சபையானது பாடல் புத்தகங்களைக் கொண்டிருக்க வேண்டுமா? இல்லை. உறுப்பினர்கள் தங்கள் நினைவில் இருந்து பாட முடியுமா? தாராளமாக செய்யலாம். அவர்கள் - துண்டுத்தாளில் அச்சிட்ட வார்த்தைகள் அல்லது ஒளிப்பட வீழ்த்தியின் உதவியால் திரையில் காண்பிக்கப்படும் பாடல் வரிகள் அல்லது ஒரு கணணி போன்ற - வேறுவகையான காட்சி உதவிப்பொருட்களைப் பயன்படுத்த முடியுமா? “ஆம்” என்பதே மீண்டும் பதிலாக உள்ளது. இவையாவும் தேவனுடைய மக்கள் பாடுவார்கள் என்ற அவரது எதிர்பார்ப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.* [4]*உதாரணமாக, Random House Webster's College Dictionary*, 2d ed. (1999) “baptize” *என்ற வினைச்சொல்லுக்கு, “தண்ணீருக்குள் முழுக்காட்டுதல் அல்லது கிறிஸ்தவர்களின் ஞானஸ்நானச் சடங்கில் தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஊற்றுதல்” என்பது முதல் விளக்கமாக உள்ளது.* [5]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 94. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 164. [7]Ibid., 887, 903.